# ஜனவரி மாதப்பாடங்கள்

## இயல் – 7

செய்யுள் : * ஒன்றே குலம்

* மெய்ஞ்ஞான ஒளி

* திருக்குறள்

உரைநடை : * அயோத்திதாசர் சிந்தனைகள்

துணைப்பாடம் * மனித யந்திரம்

இலக்கணம் * வேற்றுமை

## இயல் – 8

செய்யுள் : * நோயும் மருந்தும்

Scanned with OKEN Scanner

# இயல் - 7

## செய்யுள்

## ஒன்றே குலம்

### வினா விடை

1. யாருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை?

* மனிதர் அனைவரும் ஒரே இனத்தவர்.
* உலகைக் காக்கும் இறைவன் ஒருவன்-தான் என்ற எண்ணம் கொண்டவருக்கு எமனைப் பற்றிய அச்சம் இல்லை.

---

2. மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?

* மனிதர் அனைவரும் ஒரே இனத்தவர்
* உலகைக் காக்கும் இறைவன் ஒருவன்-தான் என்ற எண்ணம் கொண்டு, நல்வழியில் வாழும் மனிதர்கள் மக்கள் உள்ளத்தில் நிலைபெற்று வாழ்வார்கள்.

---

சிறுவினா புத்தகத்தில் குறித்து கொடுத்து படிக்க வைக்கவும்

---

புத்தகப்பயிற்சி பக்கம்: 133-ல் உள்ளதை படிக்க வைக்கவும்.

Scanned with OKEN Scanner

# இயல் – 7

## செய்யுள்

## மெய்ஞ்ஞான ஒளி

## செய்யுள் திறனறி

I. நிரப்புக:

1. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் சுல்தான் அப்துல்காதர்

2. ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் பகர்ந்தனர்.

3. 'ஆனந்தவெள்ளம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ஆனந்தம்+வெள்ளம்

4. உள்+இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் உள்ளிருக்கும்

5. மனிதனின் மனம் கலங்கக் காரணமாக இருப்பது பணத்தாசை

6. எப்பொழுதும் வாழலாம் என்பது உலகின் இயல்பு

7. ஆனந்த வெள்ளமாய் பொங்கும் கடல் இறைவன்

8. மனிதர்கள் தம் ஐம்பொறிகளை தீய வழியில் செல்ல விடாமல் காக்க வேண்டும்.

9. பகராய் என்பதன் பொருள் தருவாய்

10. எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்தல் வேண்டும்.

இயல் - 7

## உரைநடை

## அயோத்திதாசர் சிந்தனைகள்

I. குறுவினா

1. ஒருநாடு எப்போது அன்பையும், ஆற்றலையும் பெறும் என்று அயோத்திதாசர் கருதுகிறார்?

* ஒரு குடும்பத்தில் அன்பும், ஆறுதலும் நிறைந்தால், அக்குடும்பம் வாழும் ஊர் குழுவதும் அன்பும் ஆறுதலும் பெறும்.

* ஊர் அன்பும் ஆறுதலும் பெறுமானால் நாடு முழுவதும் அன்பும் ஆற்றலும் பெற்றுத் திகழும். என்பது அயோத்திதாசர் கருத்து ஆகும்

2. ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?

மக்களுள் மாமனிதராக, அறிவாற்றல் பெற்றவராக, நன்னெறியைக் கடைபிடிப்பவராக இருக்க வேண்டும். இக்குணங்கள் பெற்றவர்களையே வணக்கத்திற்கு உரியவராக மக்கள் ஏற்பார்கள், கடவுளைத் துதிப்பார்கள்" என்று அயோத்திதாசர் கூறுகிறார்.

3. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?

* சாலைகள் அமைத்தல்
* கால்வாய்களைப் பராமரித்தல்
* குடிகளின் பாதுகாப்புக்குக் காவல்துறையினரை நியமித்தல்,
* பொது மருத்துவமனைகள் அமைத்தல்,
* சிற்றூர்கள்தோறும் கல்விக்கூடங்கள் ஏற்படுத்துதல்

போன்றவற்றுக்காக திராவிட மகாஜன சங்கம் போராடியது.

---

II. சிறுவனா புத்தகத்தில் குறித்து கொடுத்து பழக்க வைக்கவும்.

---

III. புத்தகப்பயிற்சி பக்க எண்: 139-ல் உள்ளதை பழக்க வைக்கவும்.

---

## இயல் - 7

## துணைப்பாடம்

## மனித யந்திரம்

வறுமையிலும், செம்மையாக வாழ்ந்த ஒருவர் குறித்து தொகுப்பேடு தயாரிக்கவும்.

---

## இயல் - 7

**செய்யுள்:** திருக்குறள்

திருக்குறள் பாடநூலில் குறித்துக் கொடுத்து படிக்க வைக்கவும்.

---

Scanned with OKEN Scanner

# இயல் - 7

# இலக்கணம்

## வேற்றுமை

I. நிரப்புக:

1. பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்தும் முறையை வேற்றுமை என்பர்

2. பெயர்ச்சொல்லுடன் இணைக்கப்படும் இடைச்சொற்களை வேற்றுமை உருபுகள் என்பர்.

3. வேற்றுமை எட்டு வகைப்படும்

4. முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை.

5. முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்பர்.

6. எட்டாம் வேற்றுமையை விளி வேற்றுமை என்பர்.

7. வேற்றுமை உருபுகள் இடம் பெற வேண்டிய இடத்தில் அது இடம்பெறாமல் மறைந்திருந்து பொருள் தந்தால் அதனை வேற்றுமைத்தொகை என்பர்.

Scanned with OKEN Scanner

8. கருவிப்பொருள் முதற்கருவி, துணைக்கருவி என இருவகைப்படும்.

9. கருத்தாப்பொருள் ஏவுதல் கருத்தா, இயற்றுதல் கருத்தா என இருவகைப்படும்

10. பிறரைச் செய்ய வைப்பது ஏவுதல் கருத்தா.

11. தானே செய்வது இயற்றுதல் கருத்தா.

12. ஒடு, ஓடு ஆகிய மூன்றாம் வேற்றுமை உருபுகள் உடனிகழ்ச்சிப் பொருளில் வரும்.

13. படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பதையே விளிவேற்றுமை என்கிறோம்.

---

புத்தகப் பயிற்சி பக்க எண்: 148ல் உள்ளதை படிக்க வைக்கவும்.

---

II. உதாரணம் தருக;

1. இரண்டாம் வேற்றுமை – கபிலர் பரணரைப் புகழ்ந்தார்.
2. மூன்றாம் வேற்றுமை – திருக்குறள் இராமனால் படிக்கப்பட்டது.
3. ஐந்தாம் வேற்றுமை – தலையின் இழிந்த மயிர்
4. ஆறாம் வேற்றுமை – இராமனது வில்.
5. நான்காம் வேற்றுமை – முல்லைக்குத் தேர் கொடுத்தான்

Scanned with OKEN Scanner

இயல் - 8

செய்யுள்

நோயும் மருந்தும்

I. குறுவினா:

1. நோயின் மூன்று வகைகள் யாவை?

* மருந்தினால் நீங்கும் நோய்கள்
* எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்,
* வெளியில் தெரியாமல் உள்ளிருந்தே துன்பம் தரும் நோய்கள்

என நோய்கள் மூன்று வகைப்படும்.

2. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

* நல்லறிவு
* நற்காட்சி
* நல்லொழுக்கம் இவை மூன்றும் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் அருமருந்துகளாக நீலகேசி கூறுகிறது.

Scanned with OKEN Scanner

IV. சிறுவினா:

1. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

நோயின் வகைகள்:

* மருந்தினால் நீங்கும் நோய்கள்
* எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்
* வெளியில் தெரியாமல் உள்ளிருந்தே துன்பம் தரும் நோய்கள்

அவற்றைத் தீர்க்கும் வழிகள்:

* நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் இவை மூன்றையும் வாழ்வில் கடைப்பிடித்தால், பிறவித்துன்பம் நீங்கி, உயிர் இன்பத்தை அடையலாம் என்று நீலகேசி கூறுகிறது.

புத்தகப்பயிற்சி பக்க எண்: 157-ல் உள்ளதை படிக்க வைக்கவும்.

Scanned with OKEN Scanner